IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARAKKONAM, RANIPET DISTRICT.



# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII of Criminal Procedure)

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | CC.65/2017 | | |
| Miscellaneous | : | | | |
| Preliminary Register | : | | | |
| Sessions | : | | | |
| Deposition of witness for | : | Prosecution | : | PW-2 |
| | | Defence | : | |
| | | Court | : | |
| Name | : | கென்னடி | | |
| Father's Name | : | ராஜா | | |
| Village | : | ஈக்காடு | | |
| Taluk | : | திருவள்ளூர் | | |
| Caste | : | - | | |
| Calling | : | தலைமை ஆசிரியர் | | |
| Religion | : | கிருஸ்டியன் | | |
| Age | : | 55 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.03.2020

*கடந்த 05.05.2016 அன்று நான் சி.எஸ்.ஐ.சென்ரல் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்த போது 80 ஆயிரம் ரூபாய் கணினி மற்றும் அதன் பொருட்கள் திருடுபோனதாக தெரிய வந்தது அது குறித்து 06.05.2016 அன்று அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். கணினியின் மானிட்டர் கீபோர்டு சி.பியூ. மவுஸ், ஆகிய பொருட்கள் காணாமல் போயிருந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் திருடிய நபரை பிடித்துவிட்டதாகவும், திருடிய பொருட்களை விற்றுவிட்டதாகவும், போலிசார் சொன்னார்கள். எதிரியை எனக்கு போலிசார் அடையாளம் காட்டினார்களா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் நான் அளித்தது தான் அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.*

*கு.வி.*

*இந்த வழக்கின் புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் தான். பள்ளியின் பூட்டை உடைத்து பொருட்கள் திருடப்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் மறுநாள் 9.30 மணிக்கு. ஆனால் புகார் இரவு 8 மணிக்கு தான் அளித்தோம் என்றால் இல்லை பிற்பகல் 2.30 மணிபோல் கொடுத்தோம். காணாமல் போனதாக சொல்லப்படும் கணினியின் பொருட்கள் எங்கள் பள்ளிக்கு தான் வாங்கப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் ஏதாவது போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. உடைக்கப்பட்ட பூட்டை நான் போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் எப்போது என்னை விசாரணை செய்தார்கள் என்றால் அன்றைய தினமே. அதற்கு பிறகு என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் 2, 3 முறை விசாரித்தார்கள். 2, 3 முறையும் போலிசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் நடக்காத சம்பவத்திற்காக பொய்யான புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.*